DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous :
Sessions : SC 157/2022
Deposition of Witness for : PW 2

| | |
|---|---|
| Name. | திரு. மோகன்ராஜ் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 24.03.2025

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சூனாம்பேடு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 11.3.2021 அன்று எங்கள் ஆய்வாளர் என்னையும் அ.சா. 1 ஐயும் மதுவிலக்கு சம்மந்தமாக சோதனை சாவடி அருகே அழைத்துச் சென்றார். அப்பொழுது இரவு 7.00 மணியளவில் சூனாம்பேடு சோதனைச் சாவடியில் மரக்காணம் மார்க்கமிருந்து ஒரு இருசக்கர வாகனம் வந்தது. அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண். டிஎன் 43 டி 8244. அது யமகா ஸ்கூட்டி வாகனம் ஆகும். அந்த வாகனத்தில் வந்த நபரை ஆய்வாளர் எதிரி பிரகாஷ் என்கிற காகா பிரகாஷ் என்று அடையாளம் கண்டார். அந்த வாகனத்தை சோதனை செய்தபோது அந்த வாகனத்தின் முன்பு ஒரு சாக்கு மூட்டையில் திரவம் அடங்கிய பாக்கெட்டுகள் இருந்தது. ஆய்வாளர் அந்த திரவம் சாராயம் என்று கண்டறிந்து எதிரியிடம் எத்தனை பாக்கெட்டுகள் உள்ளது என்று கேட்டார். அதற்கு எதிரி 100 பாக்கெட் உள்ளதாகக் கூறினார். ஆய்வாளர் அந்த இடத்தில் எதிரியை கைது செய்து அந்த சாராய பாக்கெட்டுகளை கைப்பற்றினார்.

2) அந்த இடத்தில் பொது மக்கள் யாரும் இல்லாததால் என்னையும், அ.சா.1 யும் சாட்சியாக இருந்து அழித்தல் மகசரை ஆய்வாளர் தயார் செய்தார். அதில் நானும், அ.சா.1 ம் கையொப்பம் செய்தோம். **அந்த அழித்தல் மகசர் அ.த.சா.ஆ.1**. ஆய்வாளர் இரண்டு சுமார் 500 மிலி அளவுள்ள பிளாஸ்டிக் பாட்டில்களில் ரசாயண பகுப்பாய்விற்காக எடுத்துக் கொண்டு மீதமுள்ளதை அழித்தார். அதன் பின்பு ஆய்வாளர் எதிரியை காவல் நிலையம் அழைத்துச் சென்று வழக்கு பதிவு செய்தார். ஆய்வாளர் இதுசம்மந்தமாக என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) எதிரியிடம் ஆய்வாளர் எத்தனை பாக்கெட்டுகள் என்று கேட்டு தெரிந்து கொண்ட விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். ஆய்வாளர் விசாரணையில் எதிரியை அவர் காவல் நிலையம் அழைத்துவந்த விவரத்தை சொன்னேனா என்றால் ஆய்வாளர் எங்களுடன் தான் இருந்தார். நான் கூறியவாறு சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், ஆய்வாளர் எதிரியை கைது செய்து காவல் நிலையம் அழைத்துவரவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து அழித்தல் மகசர் ஏதும் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.